ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | தொடர்பூட்டல் திணைக்களம் |
| திகதி | 2017.11.04 |

## மத்திய வங்கியின் ஆண்டறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட தொழில்நிலை எண்ணிக்கைகள் பற்றிய தெளிவுபடுத்தல்

2014, 2015 மற்றும் 2016 ஆண்டுகளுக்கான மத்திய வங்கியின் ஆண்டறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில் நிலை எண்ணிக்கைகளை மேற்கோள் காட்டி வெளிவருகின்ற ஊடக அறிக்கைகள் மீது இலங்கை மத்திய வங்கி அவதானம் செலுத்தியுள்ளது.

தீவு முழுவதனையும் உள்ளடக்கி தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட 2012இன் குடித்தொகை மற்றும் வீடமைப்புத் தொகைமதிப்பினைத் தொடர்ந்து, பதிவாளர் நாயகம் திணைக்களமானது நடு ஆண்டு குடித்தொகை மதிப்பீடுகளுக்கான மாற்றங்களை அறிமுகப்படுத்தியதுடன் திருத்தப்பட்ட தொகுதியொன்றினை வெளியிட்டது. அதற்கமைய, 2016 யூலையில் தொழிற்படை அளவீடுகள் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் மீள் நிறையேற்றம் செய்யப்பட்டு 2011இன் பின்னரான ஆண்டுகளுடன் தொடர்புடைய தரவுகளுக்காக புதிய தொகுதியொன்று வெளியிடப்பட்டது. இது, ஏனைய அனைத்து நாடுகளிலும் பொதுவான நடைமுறையொன்றாகக் காணப்படுவதுடன் திருத்தப்பட்ட நடு ஆண்டு மதிப்பீடுகளுடனான தொழிற்படை அளவீடு மதிப்பீடுகளின் இசைவுத் தன்மையினைப் பேணுகின்றது.

(www.statistics.gov.lk/samplesurvey/Labour%20force%20Survey%20trends%20web.pdf மற்றும் www.statistics.gov.lk/samplesurvey/Re-weightingLFS.pdf).

மத்திய வங்கியானது அதன் 2016 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையில் உள்ள “தொழில் பெற்றுள்ளவர்களின் எண்ணிக்கை” உள்ளடங்கலாக மீள் நிறையேற்றப்பட்ட தொழிற்படை அளவீட்டு மதிப்பீடுகள் பற்றிய விபரங்களை உள்ளடக்கியுள்ளது. தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் வெளியீடுகளில் கிடைக்கப்பெறுகின்ற விபரங்களுக்கு மேலதிகமாக, 2013ஆம் ஆண்டு முதல் தொழிற்படை அளவீடு பற்றிய ஒப்பிடத்தக்க தொகுதியொன்றினை இலங்கை மத்திய வங்கியின் 2016ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையின் பின்னிணைப்பு 56ஆம் மற்றும் 57ஆம் அட்டவணைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

பொதுமக்களின் தகவல்களுக்காக, மீள் நிறையேற்றத்திற்கு முந்திய மற்றும் மீள் நிறையேற்றத்திற்கு பிந்திய தொழிற்படை அளவீட்டு விபரங்கள் கீழே எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

**தொழிற்படைப் போக்குகள் - தொழிற்படை மதிப்பீடுகளின் மீள் நிறையேற்றத்திற்கு முன்னரும் பின்னரும்**

| ஆண்டு | தொழில் பெற்றுள்ளவர்களின் எண்ணிக்கை ('000 ஆட்கள்) | | தொழில் வீதம் (%) | | தொழிற்படைப் பங்களிப்பு வீதம் (%) | | தொழிலின்மை வீதம் (%) | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | முன்னர் | பின்னர் | முன்னர் | பின்னர் | முன்னர் | பின்னர் | முன்னர் | பின்னர் |
| **2011** | 8,186 | 7,592 | 95.8 | 95.8 | 53.0 | 52.9 | 4.2 | 4.2 |
| **2012** | 8,118 | 7,489 | 96.0 | 96.0 | 52.6 | 52.5 | 4.0 | 4.0 |
| **2013** | 8,418 | 7,681 | 95.6 | 95.6 | 53.8 | 53.7 | 4.4 | 4.4 |
| **2014** | 8,424 | 7,700 | 95.7 | 95.7 | 53.3 | 53.2 | 4.3 | 4.3 |
| **2015** | 8,554 | 7,831 | 95.3 | 95.3 | 53.8 | 53.8 | 4.7 | 4.7 |
| **2016** | வி.கி. | 7,948 | வி.கி. | 95.6 | வி.கி. | 53.8 | வி.கி. | 4.4 |

மூலம்: தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்